## சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அம்பலக்காரன்பட்டியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி (Government Polytechnic College) 2010–2011 முதல் தொடங்குதல் – ஏற்பளிப்பு – வழங்கப்படுகிறது.

உயர் கல்வித் (பி2) துறை

அரசாணை (நிலை) எண் : 397

நாள் : 17.11.2009.
கார்த்திகை 1,
திருவள்ளுவராண்டு 2040.

படிக்கப்பட்டவை :

1. மதுரை மாவட்ட ஆட்சியாளர் கடித ந.க.எண்.64207/09/ஒய்2, நாள் 11.09.2009.
2. தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் கடித எண்.43248/எச்3/2008, நாள் 12.09.2009.

-----

ஆணை :

மைய அரசின் மாண்புமிகு இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் அவர்கள் அரசுக்கு விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அவர்கள் மதுரை மாவட்டம், மேலூர் பகுதியில் வசித்து வரும் கிராமப்புற ஏழை மாணவர்களின் தொழில்நுட்பக் கல்லூரி பட்டயப் படிப்பு தேவைகளை நன்கு பூர்த்தி செய்யும்வகையில் மேலூர் வட்டம், அம்பலக்காரன்பட்டி கிராமத்தில் 2010–2011 கல்வி ஆண்டுமுதல் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி (Government Polytechnic College) ஒன்று தொடங்குவதற்கான கருத்துரு ஒன்றை பார்வை 2–ல் காணும் கடிதத்தில் அரசுக்கு அனுப்பியுள்ளார். மதுரை மாவட்ட ஆட்சியரும் அவ்வாறு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கான நிலம் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அம்பலக்காரன்பட்டி கிராமத்தில் சர்வே எண்.402–ல் 4.05.0 ஹெக்டேர் (10 ஏக்கர்) தரிசு நிலத்தை வருவாய்த்துறை "அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி புறம்புகல்" ஆக 11.09.2009 அன்று இடமாற்றம் செய்துள்ளது. இதனால் அரசுக்கு ஆகும் கூடுதல் செலவினைப் பின்வருமாறு தொழில்நுட்பக் கல்வி ஆணையர் கணக்கிட்டுத் தெரிவித்துள்ளார்.

| | தேவைப்படும் செலவினம் (ரூபாய் லட்சத்தில்) | | | மொத்த செலவினம் (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | 2010–11 | 2011–12 | 2012–13 | |
| தொடர் செலவினம் | 132.03 | 176.87 | 221.71 | 530.61 |
| தொடராச் செலவினம் | 651.00 | 271.00 | 266.00 | 1,188.00 |
| மொத்தம் | 783.03 | 447.87 | 487.71 | 1,718.61 |

2. அரசு மேற்கண்ட கருத்துருவை ஆய்வு செய்தது. தொழில்நுட்பக் கல்வி ஆணையர் பரிந்துரையின்படி 2010–2011–ஆம் கல்வி ஆண்டிலிருந்து மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அம்பலக்காரன்பட்டியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி (Government Polytechnic College) ஒன்றைத் தொடங்கிட அரசு ஏற்பளிப்பு வழங்குகிறது. மேலும், 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் மேற்கண்ட அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கிட உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும், தொழில் நுட்பக் கல்வி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

......2.

3. அந்த புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக் கட்டிடப்பணி குறித்து ஆய்வு செய்ததில் இக்கல்லூரியில் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள மாணவர்களே படிப்பார்கள் ஆகையால், மாணவர் விடுதி கட்டத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது. ஏனைய கட்டடச் செலவுகளுக்கு மொத்தம் ரூ.6.00 கோடி அளவில் ஏற்பளிப்பு வழங்கலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகைக்குள் கட்டிடம் கட்டுவதற்கான விரிவான மதிப்பீடுகளை (Detailed Estimate) முதன்மைச் செயலாளர்/ தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசின் ஒப்புதலுக்காக அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், கட்டுமான வேலை முடிவுறும் நிலையில், பணியாளர் மற்றும் இதர தொடரும் செலவினங்களுக்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.68322/Edn-I/09, நாள் 17.11.2009–ன்படி, இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்,

பெறுநர் :

முதன்மைச் செயலாளர்/தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
மாநில கணக்காயர், சென்னை–18/35
மண்டல அலுவலர், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம், 26, ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை–6.
மாவட்ட ஆட்சியர், மதுரை,

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 17/11/09
17.11.09